1973 நவம்பர் 19]

Financial assistance from Rural Electrification Corporation.

* 193 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether the Rural Electrification Corporation has financed the State Electricity Board; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 1970-71-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 211.940 லட்சம். 1971-72-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 184.538 லட்சம். 1972-73-ல் வழங்கிய கடன் தொகை ரூ. 136.566 லட்சம். ஆக மொத்தம் ரூ. 533.044 லட்சம்.

THIRU N. DENNIS: May I know, Sir, whether that amount is used for agricultural production or for lighting ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும் ரூரல் எலக்டிரிசிடி கார்ப்பரேஷனிடமிருந்து கடன் பெறுகிறபோது, அவர்கள் இந்தக் கடன் வேளாண்மைக்கு, இந்தக் கடன் தெருவிளக்குகள் போடுவதற்கு என்று குறிப்பிட்டு அறுதியிட்டுக் கொடுக்கிறார்கள். அப்படி வாங்கப்படுகிற தொகை அந்தந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

Thermal Power Stations.

* 194 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon the Minister for Electricity be pleased to state the reasons for the delay in setting up Thermal Stations in Tuticorin and Mettur ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, 400 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க 12—11—1973-ம் தேதியன்று திட்டக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மேட்டூர் அனல் மின்சார நிலையத் திட்டம் திட்டக் குழுவின் ஆய்வில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ஒவ்வொரு திட்டத்தையும் சர்க்கார் எடுத்துக் கொள்வதற்கு முன்பாக ஒரு 30 பர்சன்டேஜ் வேலை முடித்து இருப்பார்கள். கிட்டதட்ட ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்க 4, 5 வருஷம் ஆகும். சர்க்கார் அதை விரைவில் முடிக்க, 'டாப் பிரையாரிடி' கொடுத்து 1 வருட காலத்தில் முடிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, குறைந்தது 6 ஆண்டு காலம் ஆகும். 5 ஆண்டு காலத்திற்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, தூத்துக்குடி, மேட்டூர் திட்டத்திற்குக் கிட்டத்தட்ட 70 கோடி, 65 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டு 4 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. ஏன் ஒதுக்கிய தொகையைவிடக் குறைவாகச் செலவு செய்திருக்கிறார்கள். தூத்துக்குடி திட்டம் 78-ல் தான் முடியும் என்று சொல்கிறார்கள். அதற்கு முன்னால் முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ? அதேமாதிரி மேட்டூர் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தான் வரும் என்று சொல்கிறார்கள். அதையும் 5-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டு வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்க அனுமதி பெற்று இருக்கிறோம். ஏற்கனவே அதற்கு வேண்டிய பாயிலர்கள் வாங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. பூர்வாங்க வேலைகள் சென்ற ஆண்டு முதலே நடைபெற்று வருகின்றன. மேட்டூர் மின்சார நிலையத்தைப் பொறுத்த வரையில் நிலக்கரி எடுத்து வருவதில் சிரமம் இருக்கிறது என்று திட்டக்குழுவினர் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்காளத்திலிருந்து தூத்துக்குடிக்கு நிலக்கரி கொண்டு வருவதற்குச் சிரமம் இருக்காது என்பதால், அதற்கு உடனடியாக அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் ஆந்திராவிலிருந்து போதிய அளவிற்கு நிலக்கரி கொண்டு வரமுடியுமா என்பதை பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அனுமதி கொடுக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அடுத்து மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை வரப் போகிறது. அப்போது விரிவாகப் பேசிக் கொள்ளலாம்.

Vigilance cell in Religious Endowments Department.

*195 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether any Vigilance Cell is functioning in the Hindu Religious and Charitable Endowments department ; and

(b) if so, the details thereof ?